2. அவையுரிமைக் கேள்விகள்

(அ) " நாத்திகம் " நாளிதழில் வெளிவந்த செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு எம். சுரேந்திரன் அவர்கள் ஓர் அவை உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். 8—4—70 நாளிட்ட " நாத்திகம் " என்ற பத்திரிகையில், "தி.மு.க. எம்.எல்.ஏ. ஒருவர் அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தை விலை பேசி விற்றதாக, சென்ற சட்டமன்றத் தொடரில் சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரதுரை ஆதாரத்தோடு குற்றஞ்சாட்டினார். அதுபற்றி சபாநாயகர் " ரூலிங் " தருவார் என்று அன்று கூறப்பட்டது. தி.மு.க. ஆட்சியே ! சபாநாயகரின் " ரூலிங் " இன்றுவரை வரவில்லையே, அதன் காரணம் என்ன ? " என்று எழுதியிருக்கிறது. சபாநாயகர் மீது குற்றம் சாட்டும் முறையில் இருப்பதால், இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று எழுதியிருக்கிறார். இதுபற்றி பேரவையின் இன்னொரு கூட்டத்தில் எடுத்துக் கூறுகிறேன். முற்பகல் - 10-00-ம‌ணி

(ஆ) மாநிலங்கள் அவைத் தேர்தலிலே இரண்டு வாக்குகள் செல்லாதவை ஆகியது பற்றிய திரு. டி. மார்ட்டின் அவர்கள் பேச்சு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அக்னிராஜு அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். அதன் மீது இன்று தீர்ப்பளிப்பதாகக் கூறியிருந்தேன். 31—3—70 அன்று திரு மார்ட்டின் அவர்கள் பேசுகின்றபோது, மாநிலங்கள் அவைத் தேர்தலிலே இரண்டு வோட்டுகள் செல்லாத வோட்டுகளாகிவிட்டன என்று குறிப்பிட்டார்கள். இரண்டு வாக்குச் சீட்டுக்கள் செல்லாதனவாகியுள்ளன என்பது உண்மையாதலாலும், எந்த ஓர் உறுப்பினர் பெயரும் சுட்டிக்காட்டப்படவில்லை ஆதலாலும், அவ்வாறு கூறியதில், எந்தவிதமான உரிமையும் மீறப்படவில்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(இ) மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் உண்மைக்கு மாறான தகவலைத் தந்தார் என்று கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள், மாண்புமிகு தொழில் அமைச்சர் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். 28—3—70 அன்று தான் பேசும் போது, குறுக்கிட்டு, மாண்புமிகு தொழில் அமைச்சர் தன்னுடைய கூற்றை மறுத்துப் பேசுகையில் சட்ட அமைச்சர், தனிப்பட்டவர்களும் நில ஆர்ஜிதம் செய்கிறார்கள், நில ஆர்ஜிதம் செய்வதற்குச் சட்டப்படி எந்த விதமான தடையும் இல்லை, ஆட்சேபணையும் இல்லை, சர்க்காருக்கும், இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை, கொடுப்பவர்களும் வாங்குபவர்களும் சம்மதப்பட்டால் அரசாங்கம் எதுவும் செய்ய முடியாது என்று சொன்னது உண்மைக்கு மாறானது, விதிகளுக்கு (நில ஆர்ஜித விதிகள்) புறம்பானது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தொழில் அமைச்சர் கூறியிருப்பது எந்த விதிகளுக்கும் முரண்பட்டதாகவோ மீறியதாகவோ தெரியவில்லை. ஆகவே, உரிமை எதுவும் மீறப்படவில்லை இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(ஈ) பேரவைத் தலைவரால் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்ட பகுதிகளை " நவசக்தி " நாளிதழ் வெளியிட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. பூவராகன் அவர்கள் 6—4—70 அன்று இப்பேரவையில் அவை உரிமைக் கேள்வி ஒன்றை எழுப்பினார்கள். 4—4—70 அன்று நடந்த பேரவைக் கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் பேசிய பேச்சில் ஒரு பகுதியை பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடும்படியும், அப்பகுதி பத்திரிகைகளில் வெளியிடப்படக் கூடாது என்றும் நான் அன்றே இப்பேரவையில் அறிவித்திருந்தும் 5—4—70